**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல்வழக்கு எண்.292/2020</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரிமளா | கணவர் பெயர் | : | ராஜா |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 17.02.2026

**P.W. : 1**

**<u>4 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

15.04.1942 இல் திருவேங்கடன் பிள்ளை குமாரர் மாணிக்கம் ரெங்கநாதம் பிள்ளை குமாரர் பசுபதியா பிள்ளை, ரெங்கநாதம் பிள்ளை குமாரர் பொன்னுசாமி, தங்கசாமி குமாரர் கல்யாணசுந்தரம், திருவேங்கடம் குமாரர்

சீனிவாசன் பிள்ளை ஆகிய ஐந்து பேரும் தாவா 1வது அயிட்ட சொத்தில் இருந்து வரும் வருமானத்தைக் கொண்டு 4ம் பிரதிவாதியான கோவிலுக்கு பூஜை, நைவேத்தியம் செய்து வர டிஜி.சீனிவாசம் பிள்ளைக்கு பொறுப்பை கொடுத்து அதை டிரஸ்ட் பத்திரமான பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. என் தந்தை மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதை சொல்லி கேள்விபட்டுள்ளேன். 22.04.1954 இல் 4ம் பிரதிவாதிக்கு மேற்படி டிரஸ்டி அப்பாவு பிள்ளை குமாரர் நீலமேகம் பிள்ளை அவர்களுக்கு ரெங்கசாமி முத்துராஜா குமாரர் தியாகராஜன் தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து ஒரு உடன்படிக்கை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தில் தியாகராஜன் 1வது அயிட்ட சொத்தை அபிவிருத்தி செய்யவும், பாதுகாக்கவும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது என்றால், அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 இல் சீனிவாசன் பிள்ளை தவறாக இருப்பதாக கூறியிருக்கிறேன் என்றும், 22.08.1917 இல் டிசி,சீனிவாசன் பிள்ளை தாவா 1வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கியதால் தான் மேற்படி ஆவணத்தில் அவர் பெயர் இடம்பெற்றுள்ளது என்றால் சரியல்ல. சீனிவாசன் என்ற நபரே இல்லை என்று, வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தில் ரூ.20 இலட்சம் செலவு செய்து கட்டிடம் கட்டி பால்பண்ணை வைத்துள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றும், அந்த கட்டிடம் 4ம் பிரதிவாதி கோவில் சொத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்து 4ம் பிரதிவாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தில் எனக்கோ 1 முதல் 3

பிரதிவோதிகளுக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றும், அதில் பாகம் கோர முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(1,2 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணை வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.